**சிலாபம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிலாபம் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 73,312 நிலையான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | சபையின் அலுவலகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் தொடர்பில் பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 73,312 ஆன தொகை கடன் கொடுத்தோர் கணக்கில் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், நிலையான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | விவசாய வீதி அபிவிருத்திக்காக விவசாய மற்றும் சமநல அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 200,000 | கணக்குகள் திருத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ரூபா 2,000,000 ஆக ரூபா 1,800,000 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (iii) | ரூபா 1,513,831 செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ஒலிக்கூடம் நிலையான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை | கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களின் பட்டோலைகள் / பயன்பாட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின பிரகாரம் மீதிகளுக்கிடையே இணங்காமைகளின் கூட்டுத்தொகை ரூபா 16,630,907 ஆகும். | உரிய மீதிகளில் வேறுபாடுகளை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 170,128,511 ஆக இருந்ததுடன், அவற்றில் மூன்று வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,075,622 ஆகும். | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வீதவரி நிலுவை, முத்திரைக் கட்டணம் மற்றும் மூலதன உதவியின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏனைய பெற வேண்டிய கணக்குகளை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 05 இன் கூட்டுத்தொகை ரூபா 69,887,777 ஆக இருந்ததுடன், அவற்றுள் 03 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 229,585 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கடன் கொடுத்தோரை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 196,588,536 கூட்டுப் பெறுமதியுடைய 02 விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகள் சான்றுபடுத்தும் சான்நுகள் முன்வைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டமையின் பின்னர் நிலையான சொத்துக்கள் பதிவேட்டு, மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் சொத்துக்களுக்கான பட்டோலைகள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதாக தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | |
| **(i)** | விதி இலக்கம் 217 | சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் சபையினால் வதிவிற்கு எடுக்கப்பட்ட அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்றின் நாளதுவரையாக பேணியிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடம் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது காணி கட்டிடம் தொடர்பான பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| **(ii)** | விதி இலக்கம் 218 | அனைத்து காணி மற்றும் கட்டடிங்கள் தொடர்பிலும் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணி மற்றும் கட்டடிங்கள் தொடர்பிலும் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டும். | ஒவ்வொரு வருடமும் காணி மற்றும் கட்டிடம் தொடர்பான விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | | | |
| **(i)** | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கி 06 மாதங்கள் கடந்திருந்த 10 காசோலைகள் தொடர்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கான சீராக்கங்களை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய 148 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களை விஞ்சிய அனைத்து வைப்புக்களும் பட்டியலிடப்பட்டு, மீளப்பெற்றுக் கொள்ள கூடியளவு விரைவில் விசாரித்ததன் பின்னர் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,388,780 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,296,658 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கட்டிட அபிவிருத்தி நிதியம் மற்றும் நீர் மற்றும் சுத்திகரிப்பு நிதியத்திற்கு 02 சேமிப்பு கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன், அவற்றின் பணம் கூடுதல் நலனை பெறும் விதத்தில் முதலீட்டு கணக்கிற்கு மாற்றப்படாது சேமிப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த கணக்குகளின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 994,031 ஆகும். | பணம் கூடுதல் நலனை பெறும் விதத்தில் முதலீட்டு சேமிப்புக் கணக்கின் செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் சபையின் அங்கீகாரத்தினை பெற்று முதலீட்டு கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என நான் தெரிவிக்கின்றேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 5,052 | 4,814 | 4,510 | 2,414 | 4,717 | 4,833 | 4,841 | 2,414 |
| வாடகை | 10,235 | 12,000 | 11,857 | 714 | 12,410 | 12,367 | 12,332 | 861 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,122 | 3,583 | 3,583 | - | 2,897 | 4,074 | 4,074 | - |
| ஏனைய வருமானம் | 67,276 | 69,663 | 66,609 | 126,943 | 133,775 | 74,932 | 44,028 | 154,402 |
| மொத்தம் | 84,685 | 90,060 | 86,559 | 130,071 | 153,799 | 96,206 | 65,275 | 157,677 |

❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மொத்த பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 90,060,827 மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 157,676,854 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 86,557,944 தொகை ஆண்டினுள் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஒட்டுமொத்த வருமான சேகரித்தலின் செயன்முன்னேற்றம் 35 சதவீதமாகும். | ஆண்டினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் அந்த வருடத்தினுள்ளேயே அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கா பட்டியலிடப்பட்ட வீதவரி ரூபா 4,684,624 தொகையில் ஆண்டினுள் ரூபா 3,244,850 சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட பெறுமதியில் 69 சதவீதமாகும். மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த வீதவரி ரூபா 2,179,075 இல் ஆண்டினுள் ரூபா 1,266,344 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது ஆண்டின் ஆரம்பத்திலான நிலுவை வருமானத்தில் 58 சதவீதமான அளவாகும். | ஆண்டினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் அந்த வருடத்தினுள்ளேயே அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வீதவரி நிலுவையில் ரூபா 408,964 இதுவரையிலும் அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகை 2019 ஆம் ஆண்டின் போது அறவிட எதிர்பார்க்கின்றேன். |

### 2.3.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 416,398 ஆன கேள்வி வாடகை தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 181,347 ஆன ஓய்வூதிய மண்டப வாடகை சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனபதுடன், எதிர்வுரும் காலங்களில் இவ்வாறான நிலமைகள் ஏற்படுவதனை தடுப்பதற்காக குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். | 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 181,347 ஆன தொகைக்கு இதுவரையிலும் அழைப்பாணை விடுவிக்கப்பட்டு, அதற்கு பதில் இல்லாமையால் வழக்கு தாக்கல் செய்ய சட்டத்தரணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 416,390 ஆன தொகை சில இறைச்சிக் கடைகளின் நிலுவை என்பதால், அவற்றுக்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்காமையால் பதிவழிப்பதற்கு முன்மொழிவொன்று பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டள்ளது. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற்றுக் கொள்ள வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 37,309,402 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 117,092,284 உம் ஆகும். | துரிதமாக நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 25,800,000 மற்றும் முத்திரை நிலுவைத் தொகை ரூபா 400,000 அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்புடுகின்றதென அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையினால் உப விதிகளை விதித்து உரிய சேவைகளை மக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய போதிலும், சபைக்கு சொந்தமான பாதைகள், குறுக்கு வீதிகள் மற்றும் காணிகள் மற்றும் ஆதனங்கள் ஆகியவற்றின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த உப விதிகளை விதித்து பொது மக்களின் நலனுக்காக சேவை வழங்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஆ) நிறைவேற்றப்படாத பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 13,370,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 36 பணிகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டினை தயாரிக்கும் போது உள்ளபடியாக செலவிடப்பட வேண்டிய மற்றும் தேவை தொடர்பில் இனங்கண்டு செயற்பட வேண்டும். | கணக்காயவினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் அந்த பணிகளுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், குறித்த பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீள்சுழற்சிக்காக கூட்டெரு உற்பத்தி செயற்திட்டமொன்று நடாத்திச் செல்லப்பட்ட போதிலும், இறுதியாக எஞ்சும் கழிவினை கொட்டும் இடமொன்று சபையிடம் காணப்படவில்லை. மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த உக்காத கழிவுகளின் கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் செயற்திட்டம் மற்றும் திண்மக் கழிவு செயற்திட்டத்தின் கீழ் பொலித்தீன் பாவனையை குறைத்தல் மற்றும் சபையின் அதிகாரப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு மீள பயன்படுத்தக்கூடிய பைகளை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவுகளை அகற்றும் நிரந்தர நடைமுறையொன்று இனங்காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குப்பைகளை அகற்றுவதற்காக நடைமுறையொன்றினை இனங்காண நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஈ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பான சபை அறிந்திருந்ததுடன், அவசர நிலமையொன்று ஏற்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூடிய விரைவில் மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அதிகாரப்பிரதேசத்தின் ஆண் பெண் சமநிலையை ஏற்படுத்தல் ஆகிய 02 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரியதாக நிறைவேற்றப்படக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) புரநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த மாதம்பே புதிய பேருந்து தரிப்பிடத்தில் 05 கடைகளுக்காக 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலத்திற்கு குத்தகை பணம் உரிய முறையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 மே 15 ஆந் திகதி வரையிலும் அந்த கடைகள் உரிய முறையில் திறக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது வரையிலும் கடையொன்று சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய கடைகளை திறக்குமாறு மதற்கு பின்னரும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மற்றைய கடைகள் திறக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் போது வழங்குநர்களை பதிவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 27,000 பெறுமதியான காசுக் கட்டளைகள் 39 மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் | தீர்வையாகாத காசுக் கட்டளைகள் தொடர்பில் துரதமாக நடவடிக்கை எடுக்கப்பட | காசுக் கட்டளைகளுக்குரியதாக வெளியிடப்பட்ட பற்றுச்சீட்டுகள் காணப்பட்ட போதிலும், அந்த பணம் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்த ரூபா 2,500 பெறுமதியான காசுக் கட்டளைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாது இருந்ததுடன், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | . குறித்த வழங்குநர்களிடமிருந்து தகவல் பெற்று இது தொடர்பில் மேற்படி நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 1997 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சபையின் அதிகாரப்பிரதேசத்தின் காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது பொது பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 11 காணித்து துண்டுகளின் உரித்துறுதிகள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த காணித்துண்டுகள் எல்லைகள் இடப்பட்டு பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளை துண்டுகளாக்கும் போது பொது பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் பகுதிகளை உரிய உரித்துறுதிகள் மூலம் சுவீகரிப்பதற்கும் அந்த காணித்துண்டுகள் எல்லைகள் இடப்பட்டு பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1997 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சபையின் அதிகாரப்பிரதேசத்தின் காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது பொது பணிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் பகுதிகளுக்குரிய உரித்துறுதி கோவைகளில் காணப்படும் தகவல்களை பயன்படுத்தி காணித்துண்டுகளின் நபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஈ) | 2005 ஆம் ஆண்டின் போது துண்டுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த 04 காணித்துண்டுகளில் பொதுப் பணிகளுக்காக காணித்துண்டுகள் சபைக்கு உரித்துறுதிகள் மூலம் கையளிக்கப்பட்டிராததுடன், பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய காணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய காணிகள் இனங்காணப்பட்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2005 ஆம் ஆண்டின் போது துண்டுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த காணிகள் பற்றிய தகவல்கள் இல்லாதிருந்ததுடன், எதிர்காலத்தில் தேடிப் பார்த்து நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (உ) | சிலாபம் இனிகொடவல பாடசாலை காணிணை சுவீகரிப்பதற்காக சிலாபம் பிரதேச செயலாளருக்கு 2000 ஆம் ஆண்டின் போது ரூபா 25,000 ஆன முற்பணத் தொகையும் 2019 மே 15 ஆந் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் இணியகொடு மாலியதேச கல்லூரியின் காணியை சபைக்கு சுவீகரிப்பதற்காக சிலாபம் பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா |

| | | |
|---|---|---|
| தழகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | 25,000 ஆன முற்பணத் தொகையும் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக கடிதமொன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த முற்பணம் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 416,398 ஆன வரித் தொகையொன்று குறித்த காலப்பகுதியினுள் அறவிடப்படாமையால், அறவீடு நிச்சயமற்றதாகியிருந்தது. | நிலுவை குத்தகை தொகைகளை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2002 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கேள்வி விடுக்கப்பட்ட 08 கடைகளுக்காக ரூபா 416,308 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. அதற்காக வழக்கு தொடுக்க முடியாது போயுள்ளது. அவ்வாறே குறித்த கடைகளுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை தேடிக் கண்டறிய முடியாது. |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களுக்குரிய 27 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர், பணி உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர் போன்ற சபையின் பிரதான பதவிகளும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து வெற்றிடங்கள் தொடர்பிலும் அங்கீகாரம் பெற முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் அந்த |

| | | |
|---|---|---|
| அவற்றுள் உள்ளடங்கும். மேலும் இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களுக்குரிய 02 பதவிகளின் மிகை பதவியணி 11 ஆகும். | | பதவிகளுக்காக ஆட்சேர்ப்புகளுக்காக கடமைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி ரூபா 464,957 ஆக இருந்ததுடன், பெரும்பாலான கடன் மீதிகள் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. நிலுவைக் கடன் மீதிகள் தொடர்பில் காலப்பகுப்பாய்வொன்றினை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கும் நிலுவைக் கடன் மீதிகள் தொடர்பில் காலப்பகுப்பாய்வொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஊழியர் கடன் பதிவேட்டினை சரியாக தயாரித்து காலப் பகுப்பாய்வொன்றினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடொன்று சபையிடம் காணப்படாததுடன், காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான முறையான மதிப்பாய்வொன்று எந்தவொரு வருடத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி ரூபா 185,364,898 ஆக இருந்ததுடன், ரூபா 179,590,325 ஆன பெறுமதிக்கு மாத்திரம் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சபைக்குரிய காணிகளை திட்டவட்டமாக இனங்காண காணிகளின் மதிப்பாய்வு பணிகள் மேற்கொள்ள 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 400,000 தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா | சபைக்குரிய காணிகளை திட்டவட்டமாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது காணி மற்றும் கட்டிடங்களை பரிசோதிப்பதற்காக மதிப்பாய்வு ச் சபையொன்றினை நியமித்து காணிகளை திட்டவட்டமாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

200,000 தொகை பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு வருடத்திலும் குறித்த பணி நிறைவேற்றப்பட்டிராததுடன், அது வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**3.6 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம் இணங்காத மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,800,000 தொகையான 05 பணிகள் காணப்பட்டன. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கும் வகையில் பெறுகைக் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கை திட்டத்துடன் பெறுகைகள் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக 60 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7,297,000 தொகை முழுமையாக எஞ்சியிருந்ததுடன், அவற்றுள் பெரும்பாலானவை சபையின் அதிகாரப்பிரதேசத்தின் நலன்புரி, வருமான அதிகரிப்பு, நூலக சேவைகள் மற்றும் முன்பள்ளி பணிகளுடன் தொடர்புடையன ஆகும். | வருடாந்த பாதீட்டின் மூலம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகளை வழங்கி பெருமளவிலான அவிபிருத்தி பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், உரிய நிதியேற்பாடுகள் கிடைக்காமையால் நிறைவேற்ற முடியாதிருந்தது. |
| (ஆ) | பொது நிர்வாகம் மற்றும் பதவியணி சேவைகள், சுகாதார சேவைகள், பௌதீக திட்டம், குறுக்குத் வீதிகள், காணி கட்டிடங்கள் மற்றும் நலன்புரி | வருடாந்த பாதீட்டின் மூலம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட பணிகள் | 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகளை வழங்கி பெருமளவிலான அவிபிருத்தி பணிகளை |

| | | |
|---|---|---|
| சேகைள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் 25 செலவின விடயங்களுக்குரிய ரூபா 16,855,000 தொகையான நிதியோற்பாடுகளில் ரூபா 14,730,270 தொகை செலவிடப்படாது எஞ்சியிருந்ததுடன், அந்த ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் நிதியேற்பாட்டின் 50 முதல் 99 சதவீதம் வரையிலும் எஞ்சியிருந்தது. | நிறைவேற்றப்பட வேண்டும். | மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், உரிய நிதியேற்பாடுகள் கிடைக்காமையால் நிறைவேற்ற முடியாதிருந்தது. |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தங்கள் தொடர்பில் கணக்காய்வொன்றினை திட்டமிட்டு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பற்தங்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு திட்டத்திற்காக ஒப்பந்தங்கள் தொடர்பான கணக்காய்வொன்று 2018 ஆம் ஆண்டின் போது உள்ளடக்கப்பட்டிராததுடன், 2019 ஆம் ஆண்டில் ஒப்பந்தங்கள் தொடர்பான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |